பாலசமுத்திரம் புதூர் ஊராட்சிமன்ற தலைவர் / செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை திரு D வேலுமணி

நாள் : 21.06.2024

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை காங்கயம் ஊராட்சி ஒன்றியம், பாலசமுத்திரம் புதூர் ஊராட்சி மற்றும் பாலசமுத்திரம் புதூர் கிராமம் க.ச.எண் : 376/1B,376/3B,376/4B மற்றும் 384/3B -ல் 26031 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வரப்பெற்றது - மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் மற்றும் இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்புடைய ஆவணங்கள், மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் செய்தல் மற்றும் உரிய கட்டணங்களை செலுத்த கோருதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை எண்:71 ஊரக வளர்ச்சி துறை நாள்:16.06.2003
2. அரசாணை எண் : 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3) நாள் : 04.05.2017.
3. அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 04.02.2019.
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம், திருப்பூர் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கை ந.க.எண். 3HSVRU8J/2022/TCP நாள்: 07.11.2022.

உத்தரவு:

காங்கயம் ஊராட்சி ஒன்றியம், பாலசமுத்திரம் புதூர் ஊராட்சி, பாலசமுத்திரம் புதூர் கிராமம், க.ச.எண்: 376/1B,376/3B,376/4B மற்றும் 384/3B -ல் 26031 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் உத்தேச மனைபிரிவிற்கு பார்வை 4-ல் காணும் நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் நடவடிக்கையில் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு **மவ/ந.ஊ(தி.மா) எண்.** 314/2022 என எண்ணிடப்படுள்ளது.

நகர் ஊரமைப்பு துறையின் தொழில் நுட்ப அனுமதியில் தெரிவித்தவாறு கீழ்கண்ட ஆவணங்கள், மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் செய்தல் மற்றும் உரிய கட்டணங்களை செலுத்த இதன் வழி உத்தரவிடப்படுகிறது. இப்பணிகள் முடிவுற்றவுடன் உரிய ஆவணங்கள், புகைப்படங்கள் சமர்பிக்கப்பட்டவுடன் ஊராட்சியிலிருந்து மனைப்பிரிவுக்கு இறுதி அனுமதி வழங்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

1. செலுத்த வேண்டிய கட்டணங்கள் :-

   - கூராய்வு கட்டணம் ரூ.1000/-
   - மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.80500/-
   - பராமரிப்பு பணிகளுக்கு வைப்புத்தொகை ரூ.200000/-
   - நில பயன்மாற்ற கட்டணம் ரூ. 77140/- (E-challan) (சார்பதிவாளர் அலுவலகத்தில் நிலவழிகாட்டு மதிப்பு சான்று க.ச.எண்: 376/1B,376/3B,376/4B மற்றும் 384/3B --க்கு பெற்று சமர்பிக்கபட்டவுடன் தொகை தெரிவிக்கப்படும்)
   - ஆய்வு கட்டணம் ரூ 5000/-

2. சமர்பிக்க வேண்டிய ஆவணங்கள் :-

   - சார்பதிவாளர் அலுவலகத்தில் நிலவழிகாட்டு மதிப்பு சான்று க.ச.எண்: 376/1B,376/3B,376/4B மற்றும் 384/3B -க்கு பெற்று சமர்பிக்கப்பட வேண்டும்.
   - ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகள், பொது இடத்திற்குரிய தான பத்திரம் அசல்
   - மனைப்பிரிவு வரைபடம் அசல்- 2 படி
   - ஊராட்சிக்கு ஒப்டைக்கப்பட்ட சாலை இடங்கள் வருவாய் துறையில் 103, 105-ல் உட்பிரிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அசல்
   - நகர் ஊரமைப்பு துறையில் தொழில் நுட்ப அனுமதி பெற சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சான்றுடன்
   - நகர் ஊரமைப்பு துறையில் வழங்கிய இணையதள விண்ணப்பம் படி
   - மனைப்பிரிவில் சாலைகள், மழைநீர் வடிகால், காங்கிரீட் பாலங்கள், குடிநீர் குழாய் அமைத்தல், மேல் நிலைத்தொட்டி, ஆழ்குழாய் கிணறு, பொது இடத்திற்கு கம்பி வேலி அமைத்தல் கேட் உடன், மரங்கள் நடப்பட்ட புகைப்படங்கள்
   - மனைப்பிரிவில் சாலைகள், வடிகால், பாலங்கள், மேல் நிலைத்தொட்டி, குடிநீர் குழாய் அமைத்தல் பணிகளின் தரச்சான்று (யூனியன் பொறியாளர்)
   - புதியதாக சாலைகளில் தெருவிளக்கு அமைக்க மின்சார வாரியத்திற்கு விண்ணப்ப கட்டணம் மற்றும் மதிப்பீட்டு தொகை செலுத்தப்பட்ட இரசீது படி
   - உறுதிமொழி பத்திரம் 3 எண்ணிக்கை. (நில ஆர்ஜித நடவடிக்கை, அடிப்படை வசதிகள் பராமரித்தல், நில உரிமம்)

D.Velumani
தலைவர் / செயல் அலுவலர்,
பாலசமுத்திரம்புதூர் கிராம ஊராட்சி

பெறுநர்:

Thiru. Jaganathan and 9 others,
No.14,Saraswathi layout- 3rd Street,
HP Petrol Bunk Near,Dharapuram Road, Tiruppur.